# அறுவைப் பக்கம்

## ஹீரோக்களைக் 'கிழிக்கிறார்' கவுண்டர்

வீட்டை விட்டு வெளிய வந்தே பல நாட்கள் ஆன கடுப்பில் யாருக்கும் தெரியாமல் செந்திலுக்கு போன் போட்டு வர சொல்லி, வெளியே சாப்பிட கிளம்பு கிறார் கவுண்டர். ஹோட்டலில் ஓரமாக ஒரு டேபிளில் உட்கார்ந்து ஆர்டர் செய்கிறார்கள் இருவரும்.

*கவுண்டர் :* என்னடா மண்டையா எப்படி இருக்க?

*செந்தில்:*என் நிலைமை ட்ராவிட் மாதிரி ஆகிடுச்சுண்ணே. கங்குலிக்கிட்ட திட்டு வாங்கிட்டே இருந்தப்பவாது பரவாயில்லை. இப்ப தோனி வந்தவுடனே டீம்லயே சேர்த்துக்க மாட்றாங்க. அந்த மாதிரி உங்ககிட்ட மிதி வாங்கிகிட்டாவது நடிச்சிட்டு இருந்தேன். இப்ப நீங்க இல்லாம என் நிலைமையை பார்த்தீங்களாண்ணே.

*கவுண்டர் :* சரி விடு. பீல் பண்ணாத.

பக்கத்து டேபிலில் இருந்து கேட்ட குரல்கள் மிகவும் பரிட்சையமாக தெரிந்ததால் திரும்பி பார்க்கிறார்கள். கோடம்பாக்கமே அங்கே ஆஜராகி இருந்ததை பார்த்து ஜெர்க்காகிறார்கள்.

*கவுண்டர் :* ஹாய் ஹீரோஸ். என்ன இங்க எல்லாருமே சேர்ந்து வட்ட மேஜை மாநாடு நடத்திட்டு இருக்கீங்க? ஹிந்தி படம் மாதிரி எல்லாரும் சேர்ந்து ஒரே படத்துல நடிக்க போறீங்களா?

*விஜய்:* ண்ணா. வாங்கண்ணா. பார்த்து ரொம்ப நாளாச்சி. ரொம்ப இளைச்சி போயிருக்கீங்க. ரெண்டு பாட்டில் குலுகோஸ் ஏத்தினா பழைய படி ஜம்முனு ஆகிடுவீங்கண்ணா.

*கவுண்டர் :*டேய் வயசானவனுக்கும் உடம்பு சரியில்லாத வனுக்கும் வித்தியாசம் தெரியாதவனுக்கெல்லாம் டாக்டர் பட்டம் கொடுத்தான் பாரு. அவனை சொல்லனும்டா. நான் இங்க இருந்தா ரணகளம் ஆகிடும். நான் கிளம்பறேன்.

*விஜய்:*ண்ணா. என்னங்கண்ணா இப்படி சொல்லிட்டீங்க? நாங்க இங்க ஒரு முக்கியமான விஷயம் பேச வந்திருக்கோம்ண்ணா. நீங்க தான் எங்களை எல்லாம் நல்லா வழி நடத்தனும்.

*கவுண்டர் :* சரி. ஹெல்ப்னு கேட்டுட்டா நாம எல்லாம் கர்ணன் மாதிரி. மேட்டரை சொல்லு

*விஜய்:* ண்ணா. அது வந்து சூர்யால ஆரம்பிச்சி கரு.பழனியப்பன் வரைக்கும் நடிக்க வந்துட்டாங்க. போற போக்குல தமிழ்நாட்ல எங்களை எல்லாம் வெச்சி டைரக்ட் பண்ண ஆளே இல்லாம போயிடும் போலிருக்கு. அதுக்கு தான் ஒரு முடிவெடுக்கணும்னு இங்க கூடியிருக்கோம்.

*கவுண்டர் :* ஒரு விதத்துல தமிழ் நாட்டு மக்கள் தப்பிச்சிட்டாங்கனு சந்தோஷப்பட்டாலும் அந்த கலர் மண்டையன் எல்லாம் நடிக்கறதை பார்க்கறது அவுங்களுக்கு தண்டனை தான். சரி அதுக்கு இப்ப என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கீங்க. ஹாலிவுட் டைரக்டர்ஸை யாரையாவது இம்போர்ட் பண்ண போறீங்களா?

*விஜய் :* ண்ணா. என்னங்கண்ணா இப்படி சொல்றீங்க. அவுங்களுக்கு எல்லாம் திருப்பாச்சி மாதிரி சூப்பர் படம் எடுக்க தெரியுமா? அதான் நாங்களே படம் டைரக்ட் பண்ணலாம்னு முடிவு பண்ணிட்டோம்.

*கவுண்டர் :* டேய் குருவி மண்டையா. நீ நடிச்சாலே மக்கள் தாங்க மாட்டாங்க. நீ டைரக்ட் பண்ணா எப்படிடா தாங்குவாங்க?

*செந்தில் :* அண்ணே. அந்த கதையை கொஞ்சம் சொல்ல சொல்லுங்கண்ணே. எனக்கு கேக்கணும்னு ஆசையா இருக்கு.

*கவுண்டர் :* டேய் அவிஞ்ச மண்டையா அவனுக்கு அவன் படத்து கதையே தெரியாது. இவன் நடிச்ச குஷி படத்தை தெலுகுல ரீ-மேக் பண்ணதை பார்த்துட்டு தமிழ்ல இப்படி ஒரு கதையோட படமே வரலைனு சொல்லி சச்சின்னு அதே படத்தை தமிழ்ல ரீ-மேக் பண்ணான். அதுக்கே அவனுக்கு டபுல் டாக்டர் பட்டம் கொடுத்திருக்கணும். இவன் சொல்றானு கதையை கேக்கனும்னு சொல்றீயே.

*செந்தில் :* அண்ணே. நாம கதைல ஏதாவது சேஞ்ச் பண்ணி அப்படியே ஒரு சீன்ல நுழைஞ்சிடலாம்ணே.

*கவுண்டர் :* சரி விடு. ஏம்பா டாக்டர் மண்டையா. குழந்த புள்ள ஆசைப்படுது இல்லை. அப்படியே அந்த கதையை கொஞ்சம் சொல்லேன்.

*விஜய் :* ண்ணா. இதுல ஹீரோ டபுல் ஆக்ட்ண்ணா. ரெட்டை பிறவிங்க. ஒருத்தர் அக்கா வீட்ல பணக்காரனா கோழையா வளர்றாரு. இன்னொருத்தர் பாட்டிக்கிட்ட வீரமா வளர்றார். கோழையா வளர்றவர் அவுங்க மாமாக்கிட்ட பயங்கரமா அடி வாங்கிட்டு வீட்டை விட்டு வெளியேறிடறாரு.

அதுக்கு அப்பறம் ஆள் மாறாட்டம். அதுல பாருங்களேன் அந்த வீரமா இருக்கறவர் அவுங்க மாமாவை சவுக்கால அடிப்பாரு பாருங்க. அப்படி இருக்கும்.

இதுல இன்னொரு ஸ்பேஷாலிட்டி என்னன்னா வீரமா இருக்கறவருக்கு குத்து பாட்டுண்ணா கோழையா இருக்கறவருக்கு மெலடி பாட்டுண்ணா. தமிழ் நாடே அலற போகுது பாருங்கண்ணா.

*கவுண்டர்:* டேய் போக்கிரி மண்டையா, இந்த படம் வந்து தமிழ் நாடே அலறிடுச்சிடா. நான் ஆணையிட்டால்னு MGR பாடின பாட்டை இன்னைக்கும் எல்லா எலக்ஷனுக்கும் போட்டுட்டு தான்டா இருக்காங்க.

*விஜய்:* ஆஹா. இதை MGR ஏற்கனவே நடிச்சிட்டாரா? அப்ப நான் என்ன பண்ண?

*கவுண்டர்:* நீ வேணா 'டாக்டர்' ராஜசேகர் நடிச்ச 'இது தான்டா போலிஸ்' படத்தை ரீ-மேக் பண்ணு.

விஜய்: ண்ணா. சூப்பருங்கண்ணா. அவரும் டாக்டர் நானும் டாக்டர். அட்டகாசமா ப்ரஃபஷன் மேட்ச் ஆகுதுங்கண்ணா. இன்னைக்கே ஈயா வாங்கிடறேண்ணா.

சொல்லிவிட்டு விஜய் அங்கிருந்து அவசரமாய்ப் புறப்படுகிறார்

கவுண்டர் அடுத்த நபரை பார்க்கிறார்.

*கவுண்டர்:* ஏன்டா இந்த மெட்ராஸ் வெயில்ல கருப்பு கோர்ட், கருப்பு கண்ணாடி போட்டுட்டு வந்திருக்க?

*அஜித்:* ஏ ! நா இந்த கர்ப்பு கலர் கன்னாடியும் கோர்ட்டும் போட்டு நட்ச்சா தான் படம் ஓடுது. அதான் இப்படி வந்துருக்கேன்.

*கவுண்டர்:* டேய் தல மண்டையா எல்லாரும் எழுதும் போது ஸ்பெல்லிங் மிஸ்டேக் பண்ணுவாங்க. நீ ஒருத்தன் தான் பேசும் போதே ஸ்பெல்லிங் மிஸ்டேக் பண்ற. அது சரி நீ என்னா படம் டைரக்ட் பண்ண போற?

*அஜித்:* ஏ நான் தன் இ ஆள் இல்ல. முன்னூறு அசிஸ்டண்ட் டைரக்டர்களின் மூச்சு

*கவுண்டர்:* நீ பேசறது ஒரு பேச்சு. இதுல நீ மூன்னூறு பேரோட மூச்சா? உதை வாங்கறதுக்கு முன்னாடி ஓடிப்போ.

*அஜித்:* நான் முழுச்சிட்டேன். இதோ வரேன்.

சொல்லிவிட்டு எஸ் ஆகிறார். அருகிலிருக்கு தனுஷை பார்க்கிறார் கவுண்டர்.

*கவுண்டர் :* ஏன்டா நீ என்ன கூத்து பண்ணப் போறேடா?

*தனுஷ் :* நான் ஹீரோவா நடிக்க அடுத்த படம் கதை ரெடி. படத்துக்கான டைட்டில் தான் யோசிச்சிட்டு இருக்கேன்.

*கவுண்டர்:* ஓ. இந்த சின்ன உடம்புக்குள்ள இவ்வளவு திறமையிருக்கா. எங்க கதை சொல்லு பார்ப்போம். நான் வேணா டைட்டில் சொல்றேன்.

*தனுஷ் :* ரெண்டு அரியர் வெச்ச ஒரு பையன் இருக்கான். அவனுக்கு தம்மு, தண்ணி எல்லா பழக்கமும் இருக்கு.

வேலை தேடாம தறுதலையா சுத்திட்டு இருக்கான். அவுங்க அப்பா எப்பவுமே அவனை தண்ட சோறுனுதான் திட்டிட்டு இருப்பாரு. திடீர்னு ஒரு நாள் அப்பாக்கும் மகனுக்கும் பிரச்சனையாகிடுது. உடனே மகன் பொறுப்பாகி வேலை தேடி வேலைல சேர்ந்திடறான்.

அப்படியே அவன் டாவடிக்கிற பொண்ணும் செட் ஆகிடுது. அப்படியே ஒரு குத்து பாட்டு. ரெண்டு டைட்டு. இதுக்கு டைட்டில் என்ன வைக்கலாம்னு தெரியல. படிக்காதவன், அண்ணாமலை, தளபதி, பாட்ஷா இதுல ஏதாவது ஒண்ணு வைக்கலாம்னு இருக்கேன்.

*கவுண்டர் :* 'பாபா'னு வை படம் பிச்சிக்கிட்டு ஓடும். டேய் ஓணான் மண்டையா ஒரே படத்து கதையை வெச்சிக்கிட்டு பேர் மட்டும் மாத்தி போட்டு மக்களை ஏமாத்தலாம்னு பார்க்காதீங்கடா. திருந்துங்கடா...

சொல்லிவிட்டு கவுண்டர் திரும்பி பார்க்கிறார். எல்லாரும் அந்த இடத்திலிருந்து எஸ்கேப் ஆகியிருந்தார்கள்.

*- வெட்டிப் பயல்*

## இளைக்க வேணுமா?

என்ன பண்ணுனாலும் இந்த உடம்பை கொறைக்கவே முடியலை பாண்டி. இத்தனைக்கும் நான் காலையிலே சாப்புடறதே இல்லை.. ன்னு ஒரு அவலக்குரல் நம்ம ப்ரெண்ட் அம்மணிகிட்டே இருந்து வந்துச்சு...

அட இத்தனைக்கும் அம்மணிக்கு ரொம்ப கம்மியான வயசுதாங்க... இப்போ எல்லாம் பீஸா பர்கர்னு கண்டதையும் சாப்ட்டுட்டு பாப்பாக்கள் கூட பீப்பாக்களா மாறி சுத்திகிட்டு இருக்குதுக..

உடம்பைக் குறைக்க என்ன வழின்னு தெரியாம பல அம்மணிகள் கவலை யோட பீச்சுலயும் பிஸ்ஸா கார்னர்லயும் சுத்திகிட்டு இருக்குறவன்னு நம்ம பேட்டையில வந்து பல அம்மணிகளும் சில பசங்களும் பொலம்பிகிட்டு இருக்காவ.. அதைக் கேட்டு பாண்டி மனசு பட்ட பாடு கொஞ்ச நஞ்சமி ல்லீங்கோ... இதோ சில ஜில் ஜில் ஐடியாக்களோட சிங்கம் சிங்கிளா கர்லாக் கட்டையோட களம் இறங்கிடுச்சு இல்ல..

மொதல்ல why பாப்பாஸ் become பீப்பாஸ் னு பார்ப்போமா..?

நம்ம அம்மணிக எல்லாம் சுண்டெலி மாதிரிங்க... ஒரு நிமிஷம் சும்மாவே இருக்க மாட்டாக... FM ரேடியோ கணக்கா ஏதாச்சும் பேசிகிட்டே இருக்குறது... அப்படி பேசறதுக்கு ஏதும் இல்லைன்னா ஏதையாச்சும் கொறிச்சுகிட்டே இருக்குறது... ஒரு நிமிஷம் வாய சும்மாவே இருக்க விடுறது இல்லை...

நம்ம அம்மணீஸ் பலபேரு தங்களோட வாய ஒரு மிக்ஸின்னு நெனச்சுக்கு றாங்க.. கிடைக்கறது எதுன்னாலும் அது சாப்பிடற ஐட்டமானாலும் இல்லை ஏதாச்சும் அப்பாவி ஹஸ்பண்டு இல்லை பாய்ப்ரெண்டு ஏதுனாலும் ச்சும்மா கொய்ய்ய்ன்னு அரைச்சு எடுத்துட வேண்டியது...

சரி சரி அம்மணீஸ் காது சூடாகுறது இப்போவே என்னால உணர முடியுது... கூல் டவுன் அம்மணீஸ்.. இப்போ கொஞ்சம் வஞ்சமில்லாம வளர்ந்துட்ட உடம்பை எப்படி தாஜா பண்ணி கொறைக்கலாம்னு பார்க்கலாமா..?

தினமும் கொஞ்சூண்டு தூரமாச்சும் நடையக் கட்டுங்க.. நடக்கறப்போ யாரோ ஒரு நாயோ இல்லை ரோமியோவோ உங்களை follow பண்ணுறா ன்னு ஒரு imagination ஐ ஓடவிட்டீங்கன்னா போதுங்க... அப்புறம் நீங்க PT உஷாவுக்கே tough காம்படிஷன் கொடுப்பீங்க .. அப்புறம் நீங்க 2 வருஷதுக்கு முன்ன இருந்த சிம்ரன் மாதிரி 'சிக்' குன்னு மாறலைன்னா என்னைக் கேளுங்க....

ஜிம்முக்கு போறது கூட ஒரு நல்ல ஐடியாதான்.. அங்கன போய் அங்கன வர சக சைஸ்சான அம்மணீஸ் கிட்டே எப்படி அவுக இப்படி ஆனாகன்னு லேசா பிட்டைப் போட்டு வாங்கி அப்படியே பல்ஸ் பார்த்து பேச ஆரம்பிச்சாங்கன்னா அப்புற எங்கன எக்ஸர்சைஸ் பண்ணுறது..? வழக்கம் போல இவுக வாய் மட்டும் தான் வேலை செய்யும்.. அதுனால அப்போ மட்டும் கொஞ்சம் கஷ்டப்பட்டாவது வாயத்தெறக்காம ( கொஞ்சம் கஷ்டம் தான்... இருந்தாலும் try பண்ணுங்களேன்) எக்ஸர்சைஸ் பண்ணுங்களேன்.. அப்புறம் பாருங்க ஸ்ரேயா எல்லாம் உங்ககிட்டே வந்து பிட்னெஸ் டிப்ஸ் கேட்கமாட்டாக..??

உடம்பைக் கொறைக்கறேன்னு ஒரு வேளை மட்டும் சாப்பிடறதுன்னு ஒரு வேளை மட்டும் சாப்பிடாம இருக்குறதுன்னு இருந்தீங்கன்னா ஒண்ணுமே குறையாதுங்கோ..

அப்புறம் இந்த ஸ்லிம் மாத்திரை சாப்டா இப்படி ஆகலாம்னு ஏஞ்சலினா ஜோலி மாதிரி ஒரு ஃபிகர் வந்து டிவி ல அளந்து உட்டுட்டு போகுதேன்னு வாங்கி சாப்டீங்கன்னா நீங்க இளைக்க மாட்டீக.. உங்க பர்ஸுதான் இளைச்சு போகும் பார்த்துக்கோங்க...

என்ன அம்மணீஸ் டிப்ஸ் இப்போதைக்கு போதும்னு நெனைக்கறேன்.. இன்னும் ஏதாச்சும் வேணும்னா கூச்சப்படாம கேளுங்க... உங்களுக்கு டிப்ஸ் அள்ளித் தெளிக்கதானே நாங்க இங்க இருக்கோம்..

*- ஜொள்ளுப்பாண்டி*



**ஒன் லைனிலை ஹொட்டோக் ஓடர் பண்ணுவமெண்டால் மெசின் படு சிலோ....?**